Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/10-12

# இனி எக்காளம்

VOL . 3 ISSUE . 8 தனிப்பிரதி ரூ 20/- மார்ச் 2010

கர்த்தர்,
நம்மால்
புரிந்துகொள்ளமுடியாத வழிகளில்
நமக்காகக்
காரியங்களைச் செய்கிறார்..

நம் வாஞ்சைகளை
நிறைவேற்ற அநேக வழிகளைக்
கர்த்தர் வைத்திருக்கிறார்..

கர்த்தர், புதிய வழிகளை
உங்களுக்காகத் திறப்பார்..

இந்த பூமியைவிட்டு
நீங்கள்
செல்லுவதற்குமுன்பு
கர்த்தர்,உங்களது இருதயத்தில்
வைத்த
எல்லா
தரிசனங்களையும்
நிறைவேற்றிவிடுவார்..






## இது உங்களது நேரம்

Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,Srinagar Colony,
Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.96,Old No.223,Peters Road,Royapettah,
Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy

# விசாரிக்கிறவர்

## நிஜா கென்னடி

**கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்.**

**- சங்கீதம் 55:22**

நமது கவலைகள், மனப் பாரங்கள், துக்கங்கள், சுமப்பதற்கரிதான பாரங்களை கர்த்தரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். நம் மனதிலிருக்கும் பார சுமைகளை, துன்பங்களை, நம்மை அழுத்திக் கொண்டிருக்கும் கடினமான பொறுப்புகளை, நமக்கு தொந்தரவு தரக்கூடியக் காரியங்களை நம் மனதிலிருந்து எடுத்து, அவற்றை கர்த்தர்மேல் போட்டுவிட வேண்டும். நாம் அப்பாரங்களை சுமக்கவேண்டாம். கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிட வேண்டும் என்று கர்த்தரே சொல்லுகிறார். ஆகவே அவரது, வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நம்மை ஒப்புக் கொடுப்போம். நாம், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்போது, கர்த்தர், நம்முடைய எல்லாக் காரியங்களையும் கவனித்துக் கொள்வார். நாம், நம்முடைய பாரங்களை முழுமையாக அவரிடத்தில் இறக்கி வைக்கும்போதுதான் கர்த்தர் அப்பாரங்களைத் தாங்குவதற்கு பெலனையும், சகித்துக் கொள்ளும் தன்மையையும், பொறுமையையும், ஒரு காரியத்தை செய்வதற்கான பெலனையும், அதில் நிலைத்து நிற்பதற்கான மன திடனையும் தரமுடியும். நமது எல்லா பிரச்சனைகளிலும் நம்மோடு கூட இருந்து, நமக்கு ஆதரவாயிருப்பார். ஆகவே, நமது பாரத்தையெல்லாம் கர்த்தர்மேல் வைத்துவிடுவோம். கர்த்தரையே நம்பி, அவரையே சார்ந்து, அவர்மேல் உறுதியாய் நிலைத்திருக்கிற உண்மையுள்ள கர்த்தருடைய பிள்ளைகளின் நோக்கங்களை, எடுக்கும் தீர்மானங்களைக் கர்த்தர் நிறைவேற்றுவார். நாம் செய்யும் காரியத்தில் வெற்றியைத் தருவார். ஒரு குறிப்பிட்ட முடிவை எடுப்பதற்கான யோசனைகளையும், எண்ணங்களையும் தருவார். கண்டுபிடிக்க முடியாதவற்றை கண்டுபிடிக்கச் செய்வார். நகராதக் காரியங்களை நகரச் செய்வார். செய்ய முடியாது என்று தோற்றுப்போனவைகளை செய்து முடித்துக் கொடுப்பார்.



தம்முடைய பிள்ளைகள் தோல்வியைக் காண்பதற்கு கர்த்தர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். 'நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்' என்று கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு வாக்கு கொடுத்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் பாரங்கள், துக்கங்கள், துன்பங்கள் நம்மை அழுத்தும்போது, நாம் இந்த வாக்குத்தத்தமாகிய ஆசீர்வாதத்தை, விசுவாசித்து சுதந்தரித்துக் கொள்ளவேண்டும். நாம்,வேத வார்த்தையை படிக்க, படிக்க விசுவாசம் நமக்குள்ளாகக் கடந்து வரும். நம் துயரங்கள், கவலைகள், சஞ்சலங்கள், தொல்லைகள், மனக் கலக்கங்கள், அலைக்கழிப்புகள், வருத்தங்கள் எல்லாவற்றையும் கர்த்தரிடம் போட்டுவிட கற்றுக் கொள்ள வேண்டும். நாம் மன பாரத்தோடும், கவலையோடும் இருப்பதை நம் தேவன் விரும்பவில்லை. நாம், மகிழ்ச்சியோடு இருப்பதையே விரும்புகிறார். அவர், நம் பாரங்களை சுமக்க ஆயத்தமாயிருக்கிறார். நம் மனதின் வேதனைகள், போராட்டங்களை அவர்மேல் வைத்துவிடும்போது சீக்கிரத்தில் அந்த பாரங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறார். கர்த்தர் மேல் பாரத்தை வைக்கிறவர்களின் வாழ்க்கையில், அவர்கள் கர்த்தரையே நம்பியிருக்கிறபடியால் கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் (யெகோவாயீரே) என்று அவர்கள் கவலைப்படாமல் சந்தோஷத்தாலும், சமாதானத்தாலும் நிரம்பியிருப்பார்கள். பணத்தேவையோடு இருப்பவர்களுக்கு அவர்கள் பணத்தேவைகளை சந்திப்பார். ஆதரவற்று இருப்பவர்களுக்கு ஆதரவாயிருப்பார். தொழிலில் நஷ்டமடைந்து, கவலையோடு இருக்கிறவர்களுக்கு விழுந்து விடாதபடி பராமரித்து நிலைநிறுத்துவார். படிப்பில் தோல்வியடைந்து பின்தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு ஞானத்தை கொடுத்து, தேர்வில் வெற்றியடையச் செய்வார். கீழ்ப்படியாத, மற்றும் பெற்றோரை மதிக்காத பிள்ளைகளை வைத்து வேதனைப்படும் பெற்றோருக்கு, பிள்ளைகளை கர்த்தர் மாற்றி அவர்களைக் கீழ்ப்படியச் செய்வார். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கச் செய்வார். பிள்ளைகளுக்கு திருமணம் இன்னும் நடக்கவில்லையே என்ற வருத்தத்தோடு இருப்பவர்களின் பிள்ளைகளுக்கு ஏற்ற துணையை கொண்டு வந்து திருமணத்தை நடத்திக் கொடுப்பார். தனக்கு குழந்தையில்லையே என்று வேதனையோடு இருப்பவரகளுக்கு குழந்தை பாக்கியத்தைக் கொடுப்பார். பிள்ளைகள் தூர இடத்தில் தனியாக இருக்கிறார்களே என்று அவர்களைக் குறித்த பாரத்தோடு இருப்பவர்களுக்கு பிள்ளைகளை அனுதினமும் பாதுகாத்துவழிநடத்துவார். வேலை உயர்வுக்காக காத்திருப்பவர்களுக்கு வேலையில் உயர்வை கட்டளையிடுவார். வேலையின் நிமித்தம் குடும்பத்தைவிட்டு பிரிந்து இருப்பவர்களுக்கு, இடமாற்றத்தைக் கட்டளையிட்டு குடும்பத்தோடு சேர்ந்து வாழ உதவிசெய்வார். வேலை பார்த்தும், அதற்கான கூலி கிடைக்கவில்லை என்று தவிப்பவர்களின் கூக்குரலை கேட்டு, அந்த கூலியை சீக்கிரத்தில் கிடைக்கச்

**கர்த்தர்மேல் பாரத்தை வைத்துவிட வேண்டும் என்று கர்த்தரே சொல்லுகிறார்.**

# கர்த்தர் உங்கள் மனப்பாரங்களை அறிந்து வைத்திருக்கிறார்

செய்வார். வேலைக்கேற்ற கூலி கிடைக்கவில்லையே என்று சோர்ந்து போயிருப்பவர்களுக்கு, வேலைக்கேற்ற கூலியைக் கிடைக்கச் செய்வார். தனிமையாய் இருக்கிறேன் என்று ஏங்குகிறவர்களுக்கு, கர்த்தர் கூடவே இருக்கிறார், அவர்கள் மேல் நினைவாயிருக்கிறார் என்பதை காண்பித்து, தனிமை உணர்வை எடுத்துப்போடுவார். தேவையோடு இருப்பவர்களின் தேவைகளை சந்திப்பார். ஆபத்தான சூழ்நிலையில் இருப்பவர்களுக்கு ஆபத்திலிருந்து விடுவித்து பாதுகாப்பார். நம் ஒவ்வொருவரின் தேவைகளை கர்த்தர் அறிந்திருக்கிறார். அந்த தேவைகளையெல்லாம் சந்தித்து உதவி செய்வார். உங்களுக்கு வலியையும் வேதனையையும் உண்டாக்கக்கூடிய பாரமான சுமையான காரியங்களில் கர்த்தர் இடைபட்டு, அந்த வலி, வேதனையை எடுத்துப்போடுவார். தேவையோடு இருப்பவர்களின் தேவைகளை சந்திப்பார். ஆபத்தான சூழ்நலையில் இருப்பவர்களுக்கு ஆபத்திலிருந்து விடுவித்து பாதுகாப்பார். நம் ஒவ்வொருவரின் தேவைகளை கர்த்தர் அறிந்திருக்கிறார். அந்த தேவைகளையெல்லாம் சந்தித்து உதவி செய்வார். உங்களுக்கு வலியையும் வேதனையையும் உண்டாக்கக்கூடிய பாரமான சுமையான காரியங்களில் கர்த்தர் இடைபட்டு, அந்த வலி, வேதனையை எடுத்துப்போடுவார். நம் கவலைகளையெல்லாம் தேவன்மேல் போட்டுவிட விரும்புகிறார். ஆனால், நாம்தான் அடிக்கடி கவலையை நாமே வைத்திருந்து சுமந்து கொண்டேயிருக்கிறோம்.

**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள்!**

**- 1 பேதுரு 5:7**

நாம் மனக்ககலக்கத்தோடும், பயத்தோடும், மனக்கவலையோடும் இருந்தோமென்றால், நாம் கர்த்தரை முழுமையாக நம்பவில்லை என்று அர்த்தம். கர்த்தர் நம் மேல் அக்கரையுள்ளவர், அன்புள்ளவர், தாயைக் காட்டிலும் தகப்பனைக் காட்டிலும் நம்மை நேசிக்கிறவர். யேகோவாயீரே - கர்த்தர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசம் நமக்கு வேண்டும். சிலர் ஒரு காரியம் நடப்பதற்கு முன்பே அதைக்குறித்து மிகவும் கவலையோடிருப்பார்கள். அதை எப்படி செய்து முடிப்பேன் என்றும், எனக்கு உதவி செய்ய யாரும் இல்லையே நான் தனியாக இருக்கிறேனே என்றும், அனுதின தேவையை சந்திக்க போதுமான வருமானம் இல்லையே என்றும், எப்படி இந்த மாதத்தைக் கடத்துவது என்றும், வியாதியோடிருக்கிறேனே எப்போது இந்த வியாதி என்னைவிட்டு போகும் என்றும், கடன்பாரம் என்னை அழுத்துகிறதே என்றும், சிலர் கணவனைக் குறித்தும், மனைவியைக் குறித்தும், பிள்ளைகளைக் குறித்தும், இன்னும் சொல்ல முடியாத பிரச்சனைகளினாலும்



பாரத்தோடிருக்கிறீர்களா? உங்கள் மனப்பாரங்களை கர்த்தர்மேல் வைத்து விடுங்கள். அவர் உங்கள் மனப்பாரங்களை அறிந்து வைத்திருக்கிறார். நம் பாரங்கள், நம் கவலைகள், துக்கங்கள், நோய்கள் எல்லாவற்றையும் இயேசுகிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்துவிட்டார். நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. தேவன் நம் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அனைத்தையும் (உணவு, உடை, இருப்பிடம்), சுகத்தையும், பெலத்தையும், பாதுகாப்பையும், நோயிலிருந்து விடுதலையையும், ஆரோக்கியத்தையும், நமக்கு தேவையான எல்லாவற்றையும் தர வல்லவராயிருக்கிறார். நம் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. அவர் சர்வ லோகத்தையும் ஆளுபவர். சகல அதிகாரத்தையும் உடையவர். நம் தேவனால் எல்லாம் கூடும்.

## கர்த்தரை நோக்கி முறையிடும் தாவீது

தாவீது ராஜாவாக இருந்தபோது, அவனது மகன் அப்சலோம் தாவீதின் அரசை பெற திட்டம் பண்ணி தனக்காக ஒரு கூட்ட ஜனங்களை சேர்த்துக் கொண்டான். தன்னுடைய தோற்றத்தாலும், மற்றவர்கள் மேல் கரிசனையுள்ளவனைப் போல அன்பாக இருப்பதைப் போல நடித்து, நியாயம் செய்கிறவனைப் போல நடந்து கொண்டும் ஜனங்களை ஏமாற்றி தன் பக்க கவர்ந்து கொண்டான். ஜனங்கள் அப்சலோமின் திட்டத்தை அறியாமல், அநேகர் அவனோடுகூட சேர்ந்து கொண்டனர். அப்சலோம் தாவீது ராஜாவிடம் நான் கர்த்தருக்கு பண்ணின பொருத்தனையை எப்ரோன் என்ற இடத்தில் நிறைவேற்றப் போகிறேன் என்று சொல்லிவிட்டு சென்றான்.



அங்கு அவன் எக்காளத்தை முழங்கச் செய்து, அப்சலோம் எப்ரோனிலே ராஜாவானான் என்று ஜனங்களை ஆர்ப்பரிக்கச் செய்தான் (2 சாமுவேல் 12:10). தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேலையும் தன்னோடுகூட வரவழைத்துக் கொண்டான். தாவீது இதை கேள்விப்பட்டு எருசலேமை விட்டு வெளியேறினான். தாவீது தன்னையும், தன் ஜனங்களையும் அப்சலோம் அழித்துவிடுவான் என்று பயந்து அங்கிருந்து தப்பித்து சென்றான். தாவீதும், அவனோருந்தவர்களும் அழுது கொண்டே சென்றார்கள்.

தாவீதைப் பாருங்கள். தன் மகனும், அவனுடன் சேர்ந்த தன் ஜனங்களும் தனக்கு எதிராக இருப்பதை அறிந்தவுடன் அவர்களுக்கு பயந்து ஓடிப்போனான். அநேகர் தாவீதுக்கு விரோதமாய் கர்த்தர் இருக்கிறார் என்று சொன்னார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையிலுங்கூட தாவீது கர்த்தரையே நம்பியிருந்தான். கர்த்தர் என் வலது பக்கத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை என்று கூறுகிறான்.



நீதிமான் என்றும் அசைக்கப்படுவதில்லை (நீதிமொழிகள் 10:32) நாமும் கர்த்தரை சார்ந்து வாழும் போது, எந்த பிரச்சனையும் நம்மை அசைக்கமுடியாது. நம் வாழ்க்கையிலும் கூட சூழ்நிலைகள் எல்லாம் நமக்கு எதிராக சாதகமற்று வந்தாலும், கர்த்தர் என் அருகில் இருக்கிறார். என்னோடுகூட இருக்கிறார் என்று நம்ப வேண்டும். அவரையே சார்ந்து இருக்கவேண்டும்.

தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேலே அப்சலோமுக்கு ஆலோசனைக்காரனான். தாவீதை கொல்லும்படி அப்சலோமுக்கு ஆலோசனைக் கூறினான். பிரியமானவர்களே, தாவீதோடுகூட இருந்து, அவனுக்கு வழிகாட்டியாக இருந்த, அவனுக்கு சமமான அவனது நண்பனே அவனுக்கு எதிர்த்து நிற்கிறான். தன் நண்பனும், தன் மகனும் தனக்கு துரோகம் பண்ணுவதை தாவீதால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மரண பயத்தால் நிறைந்து தேவனை நோக்கி கதறினான் (1 சாமுவேல் 15:30). தாவீது தேவனோடு கூட நெருங்கியிருந்தபோது எதிரிகளின் திட்டத்தினால் மரண பயமும், வேதனையும் அடைந்தான். அந்த வேதனையின் மத்தியிலும், அவன் தன் உதவிக்காக தேவனை நோக்கி கூப்பிட்டு முறையிடுகிறான். கர்த்தர் என் ஜெபத்தை கேட்கிறார். விண்ணப்பத்திற்கு பதில் தருவார் உதவி செய்வார் என்று விசுவாசத்துடன் ஜெபித்தான்.

**அந்தி, சந்தி, மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக் கேட்பார்.**

**- சங்கீதம் 55:17**

என்று சொல்லி, தன் கவலைகளையெல்லாம் கர்த்தரிடத்தில் ஒப்படைத்து விட்டான். கர்த்தருக்கு முன் உண்மையாய் இருந்ததினால், கர்த்தர் தனக்கு தோல்வியை தரமாட்டார் என்று விசுவாசித்தான். ஆம் பிரியமானவர்களே, கர்த்தர் தாவீதின் ஜெபத்திற்கு பதில் கொடுத்தார். அகித்தோப்பேலின் ஆலோசனையை பயித்தியமாக்கி விடுவீராக என்று தாவீது ஜெபித்தான். அதன்படி அப்சலோம் அகித்தோப்பேலின் ஆலோசனையை நிராகரிக்கும்படி கர்த்தர் செய்தார். தன் ஆலோசனையை அப்சலோம் நிராகரித்ததினால்



அகித்தோப்பேல், தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டான். தகப்பனை கொலை செய்து, தான் ராஜாவாக நினைத்த அப்சலோம் யுத்தத்தில் கொலை செய்யப்பட்டான்.

நம்முடைய வாழ்க்கையிலும், நம்மோடு கூட இருந்த நம்முடைய நண்பர்களே, நம் உறவினர்களே நமக்கு எதிராக வரலாம். நாம் சோர்ந்து போகாமல், தாவீதைப் போல கர்த்தரை நோக்கி ஜெபித்து, நம் வியாகுலங்களை கர்த்தரிடம் விட்டுவிட கற்றுக் கொள்ள வேண்டும். கர்த்தர் பார்த்துக் கொள்வார்; அவர் எல்லாற்வற்றிற்கும் பதில் செய்வார். ஒருபோதும் நம்மை கைவிடமாட்டார் என்ற விசுவாசத்தோடு கூட இருக்கவேண்டும்.

## காத்திருப்பதன் பலன்

**கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.**

**- சங்கீதம் 37:4,5**

நாம் செய்யும் எல்லா காரியங்களையும், கர்த்தரிடம் ஒப்படைத்துவிட்டு, அவரையே நம்பியிருக்கும்போது, செய்யவேண்டிய காரியத்தை கர்த்தர் நமக்காக செய்வார். நமக்கு இன்னது தேவை என்பதை நம்மைவிட கர்த்தரே அறிந்திருக்கிறார். கர்த்தர் செயல்படும்வரை நாம் பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

நமக்கு என்ன தேவையிருந்தாலும், தீர்க்க முடியாத பிரச்னையாயிருந்தாலும், போராட்டமானாலும், எந்த காரியமானாலும், நாம் கர்த்தரிடம் உதவி கேட்கும்போது, கர்த்தர் நமக்கு உதவி செய்து வெற்றியடையச் செய்வார். நம் பிரச்னைகளை, நம் திட்டங்களை, நம் வழிகளை, நம் இருதயத்தின் ஏங்கல்களை கர்த்தரை நம்பி அவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட வேண்டும். நாம் பிரச்சனைகளை நினைத்து கலங்கிக் கொண்டிருக்கக் கூடாது. கர்த்தரிடமிருந்து உதவி வராது என்று நாமே யூகிக்கக் கூடாது. மற்றவர்கள் உயர்ந்த நிலையில் இருப்பதைப் பார்த்து பொறாமைப்படவோ, வருத்தப்படவோ கூடாது. நம்முடைய வழியை கர்த்தருக்கு ஒப்புவிப்பது என்றால், நம்முடைய வாழ்க்கையை, நம் குடும்பத்தை, நம்முடைய வேலையை, நம் பொருட்களை, நமக்குரிய எல்லாவற்றையும் கர்த்தருடைய ஆளுகைக்குள்ளாக, அவருடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது நம் எண்ணங்களையும், நம் எல்லா செயல்களையும் கர்த்தரிடம் ஒப்புக்கொடுப்பது. நாம் பாதுகாப்பாக

கர்த்தரிடமிருந்து உதவி வராது என்று நாமே யூகிக்கக் கூடாது

இருப்பதற்கு கர்த்தரை நம்பி எல்லா பொறுப்புகளையும் ஒப்படைப்பது. எல்லாவற்றையும் கர்த்தருடைய கரங்களில் ஒப்புகொடுத்துவிட்டு, நாம் தேவ சமூகத்தில் அமைதியாக இருந்து அவருக்காக காத்திருக்க வேண்டும். அப்பொழுது காரியங்களை வாய்க்கச் செய்து திருப்தியை தருவார். அவருடைய வழிநடத்துதல் இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது. நாம் நம் சுயவழியில் செல்லும்போது, தோல்வியும், சமாதானமின்மையும், போராட்டங்களும், வீண் செலவுகளும், வீண் அலக்கழிப்புகளும், துக்கமும் வரும். கர்த்தருடைய வழிநடத்துதலின்படி, அவரை நம்பி காரியங்களை செய்யும்போது, வெற்றியும், சமாதானமும், சந்தோஷமும், பாதுகாப்பும், மனநிம்மதியும் வரும். கர்த்தர் கவனித்து, நம்மை பொறுப்பெடுத்து நடத்துவார். அதுவரை பொறுமையோடு காத்திருக்க வேண்டும். நம்மைவிட நமக்கு எது நல்லது, நன்மையானது என்பதை நம் தேவன் அறிந்திருக்கிறார். நம்மேல் அவர் வைத்திருக்கும் அன்பு பெரியது. அதனால் நாம் அவசரப்பட்டு நம் சுயவழிக்கு சென்றுவிடக்கூடாது. கவலைப்படாமல் அவரையே நம்பியிருக்க வேண்டும். பிரச்சனைகளையே எண்ணிக் கொண்டிருந்தால் கவலையும், மன உளைச்சலும், பயமும், கோபமும்தான் வரும். நாம் பிரச்சனையைப் பார்க்காமல், தேவனை நோக்கிப் பார்த்தால் அவர் நம்மேல் வைத்திருக்கிற அன்பையும், இரக்கத்தையும், தியாகத்தையும், அவரது நற்குணங்களையும் பார்க்கும்போது தெய்வீக சமாதானத்தால் நாம் நிரப்பப்படுவோம்.

தாவீது தேவனுடைய சித்தத்தை செய்வதற்காக காத்திருந்தான். அவனது பதினாறாவது வயதில் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். அவன் உடனே ராஜாவாகி விடவில்லை. தனது முப்பதாவது வயதுவரை அவன் காத்திருந்தான். சவுல்ராஜா பொறாமையினால் அவனை பல தடவைகள் கொலை செய்ய முயற்சி செய்தான். அவன் ராஜாவான பிறகும்கூட தனது மகனால் துரத்தப்பட்டான்.

கர்த்தர் ஆபிரகாமுக்கு அவனது எழுபத்தைந்தாவதுவயதில் நீ திரளான ஜனங்களுக்கு தகப்பனாவாய் என்று வாக்கு கொடுத்தார். அவனது நூறாவது வயதில்தான் ஈசாக்கை கர்த்தர் அவனுக்கு கொடுத்தார். இருபத்தைந்து ஆண்டுகள் ஆபிரகாம், கர்த்தர் சொன்னதை விசுவாசித்து பொறுமையோடே காத்திருந்தான்.



நாம் நம் ஜெபத்திற்கு பதில் கிடைக்கவில்லையே என்று சோர்ந்து போகிறோம். உடனடியாக பதில் வரவில்லை என்று காத்திருக்காமல் சோர்ந்து விடுகிறோம். அவரை நம்பி அவருக்காக காத்திருக்கும் காலத்தில், கர்த்தர் நமக்கு பல காரியங்களை கற்றுத் தருகிறார். கர்த்தருக்கு காத்திருப்பது என்பது வேதத்தை வாசிப்பதிலும், ஜெபத்திலும் முழுமையாக தரித்திருத்தலாகும். தமக்கு காத்திருக்கிறவர்களுக்கும், தம்மை தேடுகிற ஆத்துமாவுக்கும், கர்த்தர்



நல்லவராயிருக்கிறார் (புலம்பல் 3:25,26). அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் போராட்டங் களிலிருந்தும், சிக்கல்களிலிருந்தும் விடுதலை தருகிறார். நாம் காத்திருக்கும்போது, அவருடைய சமூகத்தில் இளைப்பாறி, புதுப்பெலனைப் பெற்றுக் கொள்ளவும், நம்மை புதுப்பித்து புதிய மனுஷனாய் மாற்றவும், பல காரியங்களை கற்றுக் கொள்ளவும் செய்கிறார். கர்த்தர் நமக்கு என்னென்ன காரியங்களை கற்றுக் கொடுக்கிறார் என்பதை நினைவில் வைத்து வாழ்க்கையில் அதை பின்பற்றுவோம்.

தாவீது தான் மீண்டும் ராஜாவாக வருவானோ? என்ற நம்பிக்கையற்ற சூழ்நிலை வந்தபோது, கர்த்தர் தாவீதை மறுபடியும் ராஜாவாக உயர்த்தினார். கர்த்தர் மேல் நம்பிக்கையாய் இருந்து, அவருடைய உதவிக்காக காத்திருந்தவர்கள், கர்த்தர் வாக்களித்ததை பெற்றுக் கொள்வார்கள். கர்த்தரால் அவர்களுக்கு உதவி வரும். அவர்கள் இருதயத்தின் வேண்டுதல்களையும், அவர்கள் தேவைகள் அனைத்தையும் கர்த்தர் கொடுப்பார். செய்கிற காரியத்தை வாய்க்கச் செய்வார். துன்மார்க்கருடைய கைக்கு தப்புவித்து, அவர்களை பாதுகாக்கிறார். தேவையான நேரத்திலெல்லாம் தேவனிடமிருந்து அவருக்கு உதவி வரும்.

## சமாதானம் தருபவர்

**அவர் தமக்கு பயந்தவர்களுடைய விருப்பத்தின்படி செய்து, அவர்கள் கூப்பிடுதலைக் கேட்டு அவர்களை இரட்சிக்கிறார்.**

**- சங்கீதம் 145:19**

கர்த்தருக்கு பயப்படுகிறவர்கள் கர்த்தரோடுகூட ஐக்கியம் வைத்திருப்பார்கள். வேதத்தை வாசித்து தியானிப்பவர்களாயிருப்பார்கள். ஜெபத்தில் கர்த்தரோடுகூட பேசுவார்கள். அவருடைய பிரசன்னத்தினால் நிரம்பியிருப்பார்கள். மற்றவர்களுக்கும் கர்த்தரைக் குறித்து சொல்லுவார்கள். இப்படி தேவனுக்கு பயந்து, அவருக்கு பிரியமான வாழ்க்கை வாழ்பவர்களின் வாஞ்சைகளையும் அவர்கள் விரும்புகிற காரியங்களையும், இரகசியமாக வைத்திருக்கும் இருதயத்தின் வேண்டுதல்களையும் தேவன் நிறைவேற்றுவார். கர்த்தர் அவரை பின்பற்றுகிறவர்களின் விருப்பத்தை நிறைவேற்றி, அவர்கள் ஜெபத்திற்கு பதில் தந்து அவர்களை காப்பாற்றுகிறார். நீதிமான்களின் ஜெபத்தையோ கர்த்தர் கேட்கிறார் (நீதிமொழிகள் 15:29)

நாம் நம் வாழ்க்கையைக் குறித்தும், வாழ்வதற்கு தேவையான உணவைக் குறித்தும் கவலைப்படக்கூடாது என்றும் உணவைக் காட்டிலும், நம் ஜீவனும், உடையைக் காட்டிலும் நம் சரீரமும் முக்கியமானது என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார் (மத்தேயு 6:25). நாம் கவலைப்படுவதினால் நம் உடல்நலம் கெட்டுப்போகிறது. கவலைப்படுவதினால் வீணான சிந்தனைகள் நமக்குள் வருகிறது. எதிர்மறையான காரிங்களை சிந்திக்கும்போது, நம் வார்த்தைகளும் எதிர்மறையாக வெளிவருகிறது. தேவன்மேல் வைக்கும் நம்பிக்கையும் குறைந்து போய்விடும். அதனால் நாம் வீணாக கவலைப்படாமல் நம்தேவைகள்

அனைத்திற்கும் தேவனிடம் உதவி கேட்க வேண்டும். நம் தேவைகள் அனைத்தையும் தேவன் அறிந்திருக்கிறார். நம் தேவைகளை நிச்சயம் நிறைவேற்றுவார். நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள். அப்போது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும் (லூக்கா *12:31*).

**நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள் காத்துக் கொள்ளும்.**

**- பிலிப்பியர் 4:6,7**

நாம் எதைக் குறித்தும் கவலைப்படக்கூடாது என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறது. நமக்கு வேண்டிய எல்லாவற்றிற்காகவும், ஏற்கனவே நமக்கு செய்த நன்மைகளையும் நன்றி சொல்லி நம்முடைய விண்ணப்பத்தையும் தேவனுக்கு தெரியப்படுத்த வேண்டும். சிலர் வேலையில்லாததைக் குறித்தும், வீட்டின் தேவைகளைக் குறித்தும், பிள்ளைகளின் படிப்பைக் குறித்தும், தங்கள் எதிர்காலத்தைக் குறித்தும், மற்றும் ஏதாவது ஒரு காரியத்தைக் குறித்தும் எப்பொழுதும் கவலைப்பட்டு கொண்டேயிருப்பார்கள். நாம் கவலைபபடுவதை நிறுத்திவிட்டு, எந்தக் காரியத்திற்காக கவலைப்பட்டோமோ அதை தேவனிடம் ஜெபத்திலே தெரிவித்துவிட வேண்டும். நம்முடைய குடும்பம், நம் வேலை, நம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு தேவனுடைய கரத்தில் உளளது. அவர் நினைத்தால்தான் நமக்கு ஒரு வேலையை கொடுக்க முடியும். தீராத பிரச்சனைகளிலிருந்து தேவனால் மாத்திரமே நம்மை விடுவிக்க முடியும். நமக்குரிய நன்மைகள் அனைத்தும் தேவனிடமிருந்துதான் வரமுடியும் என்ற அறிவு நமக்கு வரும்போது, நாம் சமாதானத்தோடு விசுவாசத்தோடுகூட இருப்போம். கவலைப்படமாட்டோம். கவலைப்படுவதினால் நம் சரீரத்தில் ஒரு முழத்தையும் கூட்ட முடியாது (மத்தேயு *6:27*).





ஜெபசிந்தையுடன் எப்போழுதும் தேவனிடம் பேசிக்கோண்டே இருக்கவேண்டும்

நாம் நம்முடைய பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிடும்போது, நம் பாவங்களை அவருடைய இரத்தத்தினால் கழுவி நம்மை சுத்திகரிக்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகளாய் மாறிவிடுகிறோம். அப்பொழுது நம் தேவைகளை உரிமையாய் அவரிடத்தில் கேட்கலாம். ஏற்றவேளையில் நம் தேவைகளை நிச்சயமாகவே சந்திப்பார். அது மாத்திரமல்ல உலகம் கொடுக்க முடியாத சமாதானத்தினால் தேவன் நமமை நிரப்பும்போது, நம் மனக்கவலையெல்லாம் மறைந்துபோகும். தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாய் நடக்கிறது (ரோமர் *8:28*). நாம் கேட்கிற காரியம் இப்பொழுது கிடைக்கவில்லை என்றால், நமக்கு அது தீமையை கொடுக்கக்கூடியதாக இருக்கலாம். அதனால் ஏற்றவேளையில் நிச்சயமாக நமக்குத் தருவார். நாம் கேட்பதைவிடவும், நினைப்பதைவிடவும், தேவன் நமக்கு மிகுதியாக செய்வார் (எபேசியர் *3:20*). எந்த சூழ்நிலை வந்தாலும் கர்த்தருக்குள் சந்தோஷமாக இருக்க வேண்டும். ஜெபசிந்தையுடன் எப்பொழுதும் தேவனிடம் பேசிக் கொண்டேயிருக்கவேண்டும். கர்த்தர் நமக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களை அனுதினமும் நமது ஜெபத்தில் அறிக்கை செய்யவேண்டும். அப்படி அறிக்கை செய்யும்போது நமக்குள் விசுவாசம் வரும். அந்த வாக்குத்தத்தங்கள் நிச்சயமாக நிறைவேறும். அதற்கான வேளைக்கு நாம் காத்திருக்க வேண்டும். கர்த்தருக்கு காத்திருக்கும்போது நாம் புது பெலன் அடைவோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், சமாதானமும் உங்களோடு கூட எப்போதும் இருப்பதாக. ஆமென்!

◈ ◈ ◈

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | **ரூ.** | **200/-** |
| **வெளிநாட்டு வருட சந்தா** | **ரூ.** | **2000/-** |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

இணைய தளம் : **www.kennedyministries.org**



# ஜோயல் ஆஸ்டின்

Joel Osteen

www.joelosteen.com

- உங்களது வாழ்க்கையில் நீங்கள் முன்னேறவே இல்லை என்று நினைக்கலாம். பாதி தூரம்கூட வரவில்லை என்று நினைக்கலாம். இன்னும் வெகுதூரம் செல்லவேண்டும் என்று நினைக்கலாம். ஆனால், உண்மை என்னவென்றால், உங்களுக்கு தெரியாது என்பதே. உங்களது கனவு, நிறைவேறும் நிலையில் இருக்கலாம். நீங்கள் நினைக்கலாம் இன்னும் இரண்டு வருடங்கள் செல்லக்கூடுமென்று. ஆனால், நீங்கள் விசுவாசத்தில் நிலைத்திருப்பீர்களென்றால், யாருக்கு தெரியும் அது இரண்டு மாதங்களாக இருக்கலாம். நீங்கள் நினைப்பதைக் காட்டிலும், சமீபமாக இருக்கின்றீர்கள். நான் விசுவாசிக்கிறேன், இது உங்கள் நேரம்.

- அவிசுவாசத்தை உங்களைவிட்டு எடுத்துப் போடுங்கள். நான் பொருளாதாரத்தில் கீழே போய்விடுவேன், என்னால் இந்தப் பாவத்தை மேற்கொள்ள முடியாது, எனக்கு நல்லதொரு புதிய வேலை கிடைக்காது - இதுபோன்ற எதிர்மறையான பேச்சை பேசாதிருங்கள். அதற்குப் பதிலாக, நான் நினைப்பதைக் காட்டிலும் சமீபமாக இருக்கிறேன், என் பிள்ளையை உயர்வுக்குக் கொண்டுவர முடியும். இந்த நோயை மேற்கொண்டு சுகம் பெறுவேன், இந்த வியாபாரத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டு வருவேன். எப்படி ஒரு புதிய வேலையை பெறுவது என்று எனக்கு தெரியும். இப்படி விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

- சங்கீதம் 30:5 இவ்வாறாகச் சொல்லுகிறது: சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். நீங்கள் ஒவ்வொரு நாள் படுக்கையைவிட்டு எழும்பும்போதும், இந்த நாள் என்னுடைய வாழ்க்கை மாறும் நாளாக இருக்கலாம், இந்த நாள் என்னுடைய நோய் சுகமாகும் நாளாக இருக்கலாம், இந்த நாள் என்னுடைய கனவு நிறைவேறுவதற்கான மனுஷனை சந்திக்கும் நாளாக இருக்கலாம் என்ற எண்ணத்தோடு, எதிர்பார்ப்போடு இருங்கள். சகரியா 9:12 சொல்லுகிறது: நம்பிக்கையுடைய சிறைகளே என்று. விட்டு விலகுவது எளிது. உற்சாகத்தை இழப்பது எளிது. ஆனால், தேவன், நாம் முழு நம்பிக்கையோடும் முழு எதிர்பார்ப்போடும் இருக்க வாஞ்சிக்கிறார். நாம் உச்சிதமானதைப் பெற்றுக் கொள்ள விரும்புகிறார். நாம் ஏதோ ஒரு காரியத்தில் சிறைப்பட்டுபோவோமானால், அது இரும்பு சங்கிலியால் நம்மை கட்டி வைத்ததுபோல ஆகும். அதிலிருந்து நீங்கள் விடுதலை



பெற முடியாது. பயத்தில், சந்தோஷத்தில், சோகத்தில் அநேகர் சிறைபட்டு இருக்கிறார்கள். அவர்களெல்லாம் சோர்வினாலும், உற்சாகமின்மை யினாலும் கட்டிவைக்கப்பட்டுள்ளார்கள். அந்த சங்கிலிகளை உடையுங்கள். நம்பிக்கைக்கு சிறைப்படுங்கள். அது எவ்வளவு காலம் எடுக்கும் என்பது காரியமல்ல. அது நடப்பதற்கு எவ்வளவு முடியாதது என்பது காரியமல்ல. உங்களது நோக்கமெல்லாம், அது நடக்கும். எனக்குத் தெரியும், நான் மேற்கொள்வேன், அது வெகு காலம் எடுக்கும். ஆனாலும், அதுநடக்கும், அது கஷ்டமாக இருக்கலாம், ஆனால், எனக்குத் தெரியும் நான் எனது வெற்றிக்கு சமீபத்தில் இருக்கிறேன் - இப்படியாக இருக்க வேண்டும். இந்த நாள் உங்கள் கனவு நிறைவேறும் நாள்.

- விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருப்பீர்களென்றால், அதற்கானப் பலன் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கும். உங்களது விசுவாசத்தை கலைக்கும்படியாக காரியம் நடப்பதில் சந்தேகப்படுபவர்களை பேச விடாதீர்கள். உங்களது வார்த்தைகளை அப்படிப்பட்டவர்களிடம் அறிக்கை செய்யுங்கள். வேதம் சொல்கிறது, நாம் தரிசித்து அல்ல, விசுவாசித்து நடக்கிறோம் என்று அப்படியென்றால், நாம் பார்த்து விசுவாசிக்க வேண்டும் என்றில்லை. இது எதிரிடையானது. நீங்கள் விசுவாசித்தால், அப்பொழுது காண்பீர்கள். உங்களது சொப்பனங் களையும், கர்த்தர் உங்களது இருதயத்தில் கொடுத்த வாக்குத்தத்தங் களையும், தினமும், இவைகளெல்லாம் நிச்சயமாக நடக்கும் என்று அறிக்கை செய்யுங்கள். இப்படியாகக் கர்த்தரிடம் பேசுங்கள், ‘‘என் தகப்பனே, உமக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன், நன்மையான எதையும் நீர் தடை செய்வதில்லை. ஏனென்றால், நான் உத்தமமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் விசுவாசிக்கிறேன், எனக்காக இப்பொழுதும் நீர் எல்லா காரியங்களையும் ஒழுங்கு செய்து கொண்டிருக்கிறீர்’’.

- கர்த்தருடைய தயவை எதிர்பாருங்கள். இப்பொழுதும் உங்களுக்காக அவர் காரியங்களை செய்து கொண்டிருக்கிறார் என்பதை விசுவாசியுங்கள். தேவன், உங்களது இருதயத்தில், தமது தரிசனங்களையும், வாஞ்சைகளையும் வைத்துள்ளார்.

- கர்த்தர், நம்மால் புரிந்து கொள்ளமுடியாத வழிகளில் நமக்காக காரியங்களைச் செய்கிறார். நமது வாஞ்சைகளை நிறைவேற்ற அநேக வழிகளைக் கர்த்தர் வைத்திருக்கிறார். வழியே இல்லை என்று இருக்கும் இடத்திலும், கர்த்தர் வழியை வைத்திருக்கிறார். உங்களுக்குள் இருக்கும் அந்தரங்க வாஞ்சைகளையும் கர்த்தர் நிறைவேற்றுவார். கர்த்தர், புதிய வழிகளை உங்களுக்காகத் திறப்பார். நமது இழப்புகளை புதிய வழிகளைத் திறப்பதற்குக் கர்த்தர் பயன்படுத்துவார். உங்களை எங்கு கொண்டு செல்ல வேண்டுமோ அங்கு கர்த்தர் கொண்டு செல்வார், விசுவாசத்தோடு இருங்கள். மரித்துப்போன (நிறைவேறாத) உங்களது தரிசனங்களையும் கர்த்தரால் உயிர்ப்பிக்க முடியும். இந்த பூமியைவிட்டு நீங்கள் செல்லுவதற்கு முன்பு கர்த்தர் உங்களது இருதயத்தில் வைத்த எல்லா தரிசனங்களையும் நிறைவேற்றி விடுவார்.




**அன்றியும் நீ ஜெபம் பண்ணும்போது மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.**

**- மத்தேயு 6:5-6**

ஜெபம் என்பது ஒரு நாடகம் அல்ல. மற்றவர்கள் நாம் ஜெபிப்பதைப் பார்த்து பாராட்ட வேண்டும் என்பதற்காக செய்யும் காரியம் அல்ல. ஜெபம் என்பது நாம், நம் பரமதகப்பனோடு கொண்டுள்ள ஒரு ஐக்கியத்தின் செயல்பாடு. மாயக்காரர்கள், ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்களுக்கு கர்த்தர் மேல் ஒரு தாகமில்லை. மற்றவர்கள் காண வேண்டும் என்பதே அவர்கள் விருப்பம். அப்படி மற்றவர்கள் கண்டுகொண்டால் அவர்கள் விருப்பம் நிறைவேறிவிட்டது. அது போதும் அவர்களுக்கு. மாயக்காரர்களுக்கு ஜெபம் பண்ணுவது என்பது விளம்பரமாகும்.



நான் எப்படி ஜெபிக்கிறேன் பார் என்று மற்றவர்களுக்கு தங்களது திறமையையும்,பக்தியையும் வெளிப்படுத்தவே விரும்புகிறார்கள். இந்த விஷயத்தில் நாமும் கூட ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். குடும்பமாக, சபையாக நாம் கூடி ஜெபிக்கும்போது, மற்றவர்கள் நம்மை உயர்வாக நினைக்க வேண்டும் என்பதற்காக வார்த்தைகளைத் தெரிவு செய்து ஜெபிக்கக் கூடாது. ஜெபிக்கும்போது, நம் பரம தகப்பனை மாத்திரமே நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். இருதயத்தின் ஆழத்திலிருந்து, வாஞ்சையோடு, கர்த்தரோடு பேச வேண்டும். அறிவுக்கு அங்கு இடம் கொடுக்கக்கூடாது. அன்புக்கு மாத்திரமே இடம் தர வேண்டும். மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது *(சங்கீதம் 42:1)* என்ற வார்த்தையின்படி, நம் உள்ளம் தேவனை வாஞ்சிக்க வேண்டும். எனவே ஜெபிப்பதற்கு முன்பாக கர்த்தரைப் போற்றிப் பாடுங்கள். நீங்கள் பாடப் பாட உங்களுக்குள்ளே கர்த்தர்மேல் வாஞ்சை வரும். அதன்பிறகு ஜெபிக்க ஆரம்பியுங்கள்.

எப்பொழுதும் தனிமையிலிருந்து ஜெபியுங்கள். சூழ்நிலைகளினிமித்தம் நம் கவனம் சிதறாமல் இருக்க தனிமை அவசியம். சுற்றுப்புறத்தில் உள்ள சத்தம் மாத்திரம் அல்ல, மற்ற மனுஷர்கள் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்வு, நாம் சுதந்திரமாக விடுதலையோடு கர்த்தரை துதித்துப் பாடுவதற்கும், ஆராதிப்பதற்கும் தடையாக இருந்துவிடும். ஒரு சிறு கூட்டமாக இருந்து ஜெபிக்கும்போது, வாய்விட்டு ஜெபிக்க வேண்டும். ஏனென்றால் மற்றவர்களுக்கும் நாம் என்ன சொல்லி ஜெபிக்கிறோம் என்பது புரிய வேண்டும். தனிமையில் ஜெபிக்கும்போது வாய்விட்டு ஜெபிக்கவேண்டுமென்று அவசியமில்லை. உள்ளத்திற்குள்ளேயே ஜெபிக்கலாம். இதற்கான உதாரணம் வேதத்திலேயே உள்ளது: அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள்; அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது, அவள் சத்தமோ கேட்கப்படவில்லை.. *(1 சாமுவேல் 1:13)*.

இப்படித்தான், அதாவது இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு இன்னின்ன முறையில்தான் ஜெபிக்கவேண்டும் என்றெல்லாம் எந்த கோட்பாடும் இல்லை.நீங்கள் உங்கள் பரம தகப்பனோடு மனசுவிட்டு பேசவேண்டும் என்பதே காரியம். நாம், நம்முடைய அன்பே உருவான பரம தகப்பனிடம் பேச வேண்டும், உரிமையோடு இன்னின்ன காரியங்களை என் வாழ்க்கையில் செய்து தாரும் என்று கேட்க விரும்புகிறார். அதுதான் அவருடைய அன்பு. கேளுங்கள், கொடுக்கப்படும் என்கிறார் நாம் கேட்பதற்கு முன்பாகவே நமக்கு இன்னது தேவை என்பதை குறிப்பாய் அவர் அறிவார் *(மத்தேயு 6:8)*. ஆனாலும், நாம் அவரிடம் சென்று அவரோடு உறவாட விரும்புகிறார். எத்தனை கோடி ஜனங்கள் இந்த பூமியில் இருந்தாலும் உங்களோடு தனித்து உறவாட உங்கள் பரம தகப்பன் வாஞ்சையோடு காத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் எப்போது ஜெபித்தாலும் கேட்பார். இந்த நேரம் ஜெபித்தால்தான் கேட்பார் என்றெல்லாம் கட்டுப்பாடு கிடையாது. இப்போதே உங்கள் மேல் அளவில்லா அன்பு வைத்துள்ள உங்கள் பரம தகப்பனோடு பேசுங்கள். அல்லேலூயா!

◇ ◇ ◇